Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 91

National Tamil Daily தேசிய தினசரி

(13-5-65)

விசுவாவசு சித்திரை 31 முஹர்ரம் பிறை 11 வியாழக்கிழமை

## ஐந்துலட்சம் தொன் அரிசிதேவை
### அதிகாரிகள் வெளிநாடுகள் பயணம்

கொழும்பு, புதன் இலங்கைக்கு இன்னமும் 60,000 தொன் அரிசி இந்த வருடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படவேண்டுமெனத் தெரியவருகிறது. இந்தமாத முடிவில் இது விஷயமாகக் கலந்தாலோசிப்பதற்காக இங்கிருந்து உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி வெளிநாடுகளுக்கு பயணமாவார் எனவும் தெரியவருகிறது. உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி பாகிஸ்தான், தாய்லாந்து, பர்மா முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு அதிகாரிகளுடன் முதலில் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

இலங்கை எல்லாமாக ஐந்து லட்சம் டன் அரிசி வழக்கமாக வருடமொன்றிற்கு இறக்குமதி செய்கின்றது- இதற்கு மாறாக இவ்வருடம் 150,000 டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இம்முறை அறுவடை சரியான முறையில் பலன் கொடுக்காதபடியால்தான் மேலதிகமாக இரண்டு இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்று உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தமிழரசு செயற்குழு மட்டக்களப்பில் கூடுகிறது

கொழும்பு, புதன் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் கூடுகிறது.

இக்கூட்டத்தில் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு மந்திரிகள் விஜயம் செய்யும்பொழுது தமிழரசுக் கட்சி எவ்விதம் நடந்துகொள்வதென்பது பற்றித் தீர்மானிக்கப்படுமெனத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் தொழிற்சங்க நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது பற்றியும் கமிட்டி ஆராயுமெனத் தெரிகிறது.

## எண்ணெய்க்கம்பனிகளுக்கு
# 7 வருடத்தில் நஷ்ட ஈடு வழங்க முடிவு

கொழும்பு, புதன் அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளுக்கு ஐந்து கோடியே ஐம்பது லட்சம்ரூபாய் நஷ்டஈடு வழங்குவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதல்லவா? இத் தொகையை ஏழு வருட காலத்துக்குள் கொடுப்பதென இப்பொழுது அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நஷ்டஈடு வழங்குவதென அரசாங்கம் செய்துள்ள முடிவு பற்றி அமெரிக்காவுக்கு உத்தியோக முறையில் தெரிவிக்கப்பட்டதும் அமெரிக்கா தனது உதவித்திட்டம்பற்றி அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## எந்த ஆக்கிரமிப்பையும் இலங்கை எதிர்க்கும்
### மந்திரி பீரிஸ் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, புதன் எந்த ஒருநாட்டின் எல்லைக்குள்ளும் வேறு ஒரு நாடு ஆக்கிரமிப்பு செய்தால் அதனை இந்த அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கும். அது அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் அல்லது சீனாவாக இருக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை என்று வர்த்தகமந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் செனட்டில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

இரு செனட்டர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்முகமாகவே செனட்டர் பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து செனட்டர் பீரிஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது- ஒரு தேசத்தின் மேல் இன்னொர் தேசம் இராணுவ ஆக்கிரமிப்பை கட்டாயப்படுத்தக்கூடாது. எல்லா வெளிநாட்டு துருப்புக்களும் வாபஸ் பெற வேண்டும். 1963-ம் ஆண்டில் அமெரிக்கத் துருப்புக்கள் தென்வியட்னாமிலிருந்து வெளியேற வேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சி கோரியது. அதுவே இப்போதும் நமது கொள்கை.

இந்திய பாகிஸ்தான் தகராறில் ஆக்கிரமிப்பாளர் யார் என்பதைப்பற்றிக் கூறுவதற்கான சாத்தியமில்லையென்றும் அவர் கூறினார்.

## தொழில் நுட்ப பாடசாலை பரீட்சை
### வினாத்தாள் வெளியானது பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையின் 1965-66-ம் ஆண்டு வணிகப் போதனைப் புகுமுகப் பரீட்சை சமீபத்தில் நடைபெற்றபொழுது வினாத்தாள்கள் முன்னதாகவே வெளியானதாக மாணவர்கள் தெரிவித்த புகார் சம்பந்தமாக நேற்றுக் காலை கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையில் விசாரணை நடைபெற்றது. கணக்காளர் திரு. கனகசபை விசாரணை செய்தார்.

வர்த்தகக்கலைமன்றச் செயலாளர் திரு மா. புவனேந்திரனும் மற்றும் பலரும் அந்தரங்கமாகச் சாட்சியமளித்ததுடன் பல தஸ்தாவேஜுகளையும் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

## நாளை ஆரம்பமாகும் காங்கிரஸ் மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இருபதாவது ஆண்டு மகாநாடு நாளை வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறும். வாலிப முன்னணி மகாநாட்டுடன் ஆரம்பமாகும். வாலிப முன்னணி மகாநாட்டுக்கு வழக்கறிஞர் திரு. எம். எஸ். சுந்தரலிங்கம் தலைமை வகிக்கிறார். நாளை மாலை வழக்கறிஞர் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் கலைவிழா நடைபெறும். சனிக்கிழமை காலை நகரமண்டபத்தில் திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தின் தலைமையில் அரசியல் மகாநாடு ஆரம்பமாகும்! இம்மகாநாட்டில் காங்கிரஸின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி திரு, பொன்னம்பலம் தமது தலைமையுரையில் குறிப்பிடுவார் எனத் தெரிகிறது. சனிக்கிழமை மாலை கோட்டைமைதானத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை நகரமண்டபத்தில் நடைபெறும் பொதுச்சபைக் கூட்டத்துடன் மகாநாடு முடிவடையும்.

இம்மகாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும் கலந்துகொள்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்ப்பேசும் மக்களுக்கென பொருளாதாரத்திட்டங்கள் சில இம்மகாநாட்டில் வெளியிடப்படுமெனவும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சீன முயற்சி
## ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் இந்திய விரோத நடவடிக்கை

ஆக்ரா, மே 12 கானாவில் நடைபெறும் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் இந்தியாவுக்கு விரோதமானதும். பாகிஸ்தானுக்கு ஆதரவானதுமான குறிப்பு ஒன்றை பிரதிநிதிகளிடையே சீனப் பிரதிநிதிகள் விநியோகம் செய்திருக்கிறார்கள்.

ஆனல் மகாநாட்டின் தலைவர் இதுபற்றிய இந்தியாவின் முறைப்பாட்டைப் பரிசீலனை செய்வதாக உறுதியளித்திருக்கிறார்.

சீனாவின் இத்தகைய நடவடிக்கை மகாநாட்டைக் குலைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என கானா அரசாங்கம் இதர பிரதிநிதிகளுக்கு அறிவித்திருக்கிறது.

## பிணையில் செல்ல அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், வியா. பரந்தன் கொலை வழக்கின் எதிரிகளான இராசரத்தினம், நடராசா ஆகியோரை பிணையில் செல்ல அனுமதிக்கும்படி புறக்டர் தனையசிங்கம் யோகநாதன், நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகரிடம் ஓர் விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.

இவ்வழக்கில் பரந்தனைச் சேர்ந்த இராசரத்தினம், நடராசா ஆகியோர் கருப்பண்ணன் முத்துச்சாமியை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதியரசர், எதிரிகளை பிணையில்செல்லவிட முடியாதெனத் தெரிவித்தார்.

## வடபகுதி அசைஸ் விசாரணை
## கரையூர் கொலைவழக்கில் எதிரிக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், வியாழன் கரையூர் கொலை வழக்கில் எதிரியான மரியான் அந்தோனிப்பிள்ளைக்கு நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கரையூர் கொலை வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின், ஜூரி சபையினர் எதிரி குற்றவாளி என ஏகமனதாகத் தெரிவித்தனர்.

இவ்வழக்கில் 1963-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் திகதி கரையூரில் மரியான் அந்தோனிப்பிள்ளை என்பவர் அவரது மனைவி மரியம்மாவைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தீர்ப்பளித்த பின் ஏதாவது காரணம் காட்ட முடியுமா? என எதிரியிடம் கேட்கப்பட்டபோது கைபிழைபாடாகச் செய்ததாக எதிரி தெரிவித்தார்.

இவ்வருடம் ஜூன் மாதம் 22-ந் திகதி செவ்வாய்க்கிழமை கண்டி போகம்பரை சிறையில் உள்ள நான்கு மதிற் சுவருக்குள் பிராணன் நீங்கும்வரை கழுத்திலிருக்கிட்டு தூக்கிலிடப்படுவாய் எனத் தீர்ப்பளிக்கும்போது தெரிவிக்கப்பட்டது.

## அசைஸ் விசாரணை முடிவுற்றது

யாழ்ப்பாணம், வியா. வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் முதலாவது பருவகால விசாரணை நேற்றுடன் முடிவடைந்தது.

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
# 20-ம் ஆண்டு மகாநாடு

**14-5-65 வெள்ளிக்கிழமை**

காலை: 9-00 — 1-00 வாலிப முன்னணி மகாநாடு.
இடம்: நகரசபை மண்டபம்—யாழ்ப்பாணம்.
மாலை: 6-00—10-00 முத்தமிழ்க் கலைவிழா.
இடம்: திறந்தவெளி அரங்கு.

**15-5-65 சனிக்கிழமை**

காலை: 9-00—12-00 அரசியல் மகாநாடு.
பிற்பகல்: 2-00—3-00 „
பிற்பகல்: 3-00—6-00 வருடாந்தக் கூட்டம்.
இடம்: நகரசபை மண்டபம்.
மாலை: 6-00—10-00 பகிரங்கக் கூட்டம்
இடம்: கோட்டை மைதானம்.

**16-5-65 ஞாயிற்றுக்கிழமை**

காலை: 9-00—12-00 பொதுச்சபைக் கூட்டம்.
இடம்: நகரசபை மண்டபம்.

Advt.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் என்பது யார்? நமக்குள்ளும் இப்பிரபஞ்சத்துக்குள்ளும் அவர் பரந்து இருக்கின்றார். அவர் நமது நகங்களுக்கும் விரல்களுக்கும் உள்ள தொடர்பை விட நம்முடனும் உலகத்துடனும் அவர் நெருங்கிக் கலந்திருக்கிறார்.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 31 உ. (13-5-65)


## ஒரு பெரிய தடை நீங்கியது

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் எண்ணெய்க்கம்பெனிகள் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த ஒரு தகராறு சுமுகமாகத் தீர்ந்துவிட்டதும், இனி அமெரிக்க உதவிகள் நமக்குக் கிடைக்கலாமென்றும் வெளியாகியுள்ள செய்தி ஆறுதலளிப்பதாகும்.

இலங்கையிலிருந்த எல்லா எண்ணெய்க் கம்பெனிகளையும் முந்திய அரசாங்கம் தேச உடைமையாக்கியதும், அதற்கான நஷ்டஈட்டை அக்கம்பெனிகளுக்கு வழங்க "தக்க நடவடிக்கை" எடுக்கவில்லை என்று காரணம் கூறி, தங்கள் புதிய சட்டப்படி, அமெரிக்கா நமக்கு உதவிகளைத் திடீரென ஒரு தலைப்பட்சமாக நிறுத்தியது. ஆனால் முந்திய அரசாங்கமும் நஷ்டஈடு தர மறுக்கவில்லை. எவ்வளவு நஷ்டஈடு தருவது என்பதுபற்றி இருதரப்பினரிடையேயும் பேச்சுகள் நடந்து வந்துள்ளன. அமெரிக்க கம்பெனிகள் 10 கோடி நஷ்டஈடு கேட்டன. முதலில் இலங்கை 3 கோடி கொடுப்பதாகக் கூறியது. பின்னர் மாஜி நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா ஐந்து கோடிவரை தருவதாகக் கூறியுள்ளார். இப்போதைய அரசாங்கம் இந்தத் தொகையை மேலும் 50 லட்சம் உயர்த்தி ஐந்தரைக் கோடி என்று நஷ்டஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே டண நெருக்கடியால் அவதிப்படும் இலங்கை இந்தத் தொகையை எப்படிச் செலுத்த முடியும் என்பது தெரியவில்லை. எப்படியும் இந்தப் பெரிய முட்டுக்கட்டை நீங்கி இரு நாடுகளுக்கும் மீண்டும் நல்லுறவுகள் ஏற்பட வழி பிறந்தது ஆறுதலளிப்பதாகும்.

புதிதாக விடுதலையடைந்த ஜனநாயக நாடான இலங்கைக்கு அமெரிக்கா இனி என்ன உதவி அளிக்கப்போகிறதென்பது முக்கிய விஷயம். ஏற்கெனவே அமெரிக்கா நமக்கு அளித்த உதவிகள் மிக அற்பமே. அமெரிக்க உதவிகள் நின்றதும், புதுச் சீனம் நமக்கு அளித்த உதவிகளுடன் ஒப்பிடும்போது, பழைய அமெரிக்க உதவிகள் எவ்வளவு குறைவானவை என்பது தெரிய முடியும். ரப்பர்—அரிசி ஒப்பந்தமூலம், இலங்கை விஷயமாக சீனம் மிகத் தாராள மனம் காட்டிவந்துள்ளதுடன், கோடிக்கணக்கில் வேறு உதவிகளையும் செய்துவந்துள்ளது. இலங்கைக்கு இனியும் சீன உதவிகள் கிடைக்குமா என்பது நிச்சயமில்லை. சீனத்தைவிட அதிக செல்வமும் செல்வாக்குமுள்ளதும், உலகில் ஜனநாயகதர்மத்தை நிலைநிறுத்தப் போவதாகக் கூறுவதுமான அமெரிக்கா, சிறிய ஜனநாயக நாடான இலங்கைக்கு, சீனம் அளித்ததைவிட அதிகமான உதவிகளை அளிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான முறையிலும், இங்கு வாழ்க்கைச் செலவுகளையும், வேலையில்லாக் கஷ்டத்தையும் குறைக்கும் வகையிலுமே, அமெரிக்க உதவிகள் இருக்கவேண்டும். புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும், விவசாயத்தைப் பெருக்கவும் நமது மூலப் பொருள்களுக்கு நியாயமான விலையைக் கொடுக்கவும், இனி, அமெரிக்கா முன்வருமாயின் இலங்கையின் புதிய அரசாங்கத்தின் மண்டையிடிகள் வெகுவாகக் குறையலாம். எப்படியும் இலங்கை தனது மத்தியவழிக் கொள்கையைக் கைவிடாமல், அமெரிக்காவிலிருந்து நிபந்தனையற்ற தக்க உதவிகள் இனி அதிகம் கிடைக்குமென்றே இங்கு பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

வெசாக்தினத்தை முன்னிட்டு

## குற்றவாளிகளுக்கு சலுகைகள்?

பம்பலப்பிட்டி, புதன்

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு வெசாக்தினத்தை முன்னிட்டு கொடுக்கப்பட்ட தண்டனையைக் குறைப்பதுபற்றி தற்பொழுது அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. இது விஷயமாக மூன்று மந்திரிகள் தங்கள் கருத்துக்களை மந்திரி சபைக்குச் சமர்ப்பித்துள்ளார்கள்.

வெசாக்தினத்தில் இப்படியான சலுகைகளை குற்றவாளிகளுக்கு அரசாங்கம் கொடுக்குமானால் பொதுமக்களை பெருமளவுக்குப் திருப்திப்படுத்துவதுடன் துரதிஷ்டவசமாக குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு இரக்கம் காட்டுவதாகவும் இச்செய்கை அமையும் என்று மந்திரிகள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்களாம்.

—

## சிவில் ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள்

பம்பலப்பிட்டி, புதன்

சில அரசாங்க உழியர்களுக்கே அரசியல் உரிமைகள் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது. சில்லறை அரசாங்க ஊழியர்களுக்கும், சரீர உழைப்புத் தொழிலாளர்களுக்கும் இத்துறையில் பூரண அரசியல் உரிமைகள் கொடுக்கப்படும். குமாஸ்தாக்களாகக் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் அனுமதியுடனேயே சில குறிக்கப்பட்ட அரசியல் உரிமைகள் கொடுக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசியலில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாது.

# வெங்காயச் செய்கையால் லாபமா? நஷ்டமா?

வடபகுதியில் ஈரவெங்காய உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும் வருடமுழுவதும் வெங்காயம் செய்கை பண்ணவும் சிலவழிவகைகளை அரசாங்கம் தயாரித்துள்ளது. வெங்காயத்தை விவசாயிகளிடமிருந்து மாதா மாதம் கொள்வனவு செய்யவும் வெங்காயத்தின் உத்தரவாத விலையை மாதாமாதம் மாற்றியமைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இப்பொழுது ஈரவெங்காயம் செய்கை பண்ணுவதில் உள்ள செலவும் விவசாயிக்கு அதன் மூலம் கிடைக்கும் பயனும் எப்படிப்பட்டதென்பதை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு செ. செந்தில்நாதன் என்பவர் புள்ளி விபரத்துடன் இங்கு விளக்கிக் கூறுகிறார். இதில் சிலவற்றில் சிறுவித்தியாசம் ஏற்படக் கூடுமெனறும் அவர் குறிப்பிடுகிறார். செலவினங்கள் அதிகரிப்பதால் வெங்காயச் செய்கையை யாழ்ப்பாண விவசாயி குறைக்க வேண்டுமென்பது அவரது கருத்து. வெங்காய உற்பத்தியை அதிகரிக்கத்திட்டமிடும் அரசாங்கத்திற்கு இக் குறிப்பு உபயோகப்படலாம்.

1000 கண்டு வெங்காயம் அதாவது 1/4 ஏக்கர் அல்லது 37/8 நிலப்பரப்பில் பயிரிட்டு அறுவடை செய்யவரும் செலவினங்கள்,

| | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 1 | ஒரு லொறி பாரம் எரு | 300 | 00 |
| 2 | நிலத்தைக் கொத்துவதற்கு 5 கூலி ரூ. 3/-வீதம் | 15 | 00 |
| 3 | 2வண்டில் இலைக் குப்புகள் | 100 | 00 |
| 4 | விதை நிலத்தில தாழ்ப்பதற்கு 10 கூலி | 30 | 00 |
| 5 | பாத்திகோலித் தோட்டம் கட்ட 3 கூலி | 9 | 00 |
| 6 | விதை வெங்காயம் 5 அல்லது 6 அந்தர் ரூ 25/- வீதம் | 150 | 00 |
| 7 | வெங்காயத்தை நடுவதற்கு 10 பெண் கூலி ரூ 2/-வீதம் | 20 | 00 |
| 8 | களை பிடுங்குவதற்கு 16 கூலி (பெண்) | 32 | 00 |
| 9 | களை பிடுங்குவதற்கு 2-ம் முறை | 32 | 00 |
| 10 | அறுவடை 10 பெண் கூலி | 20 | 00 |
| 11 | அறுவடை செய்ததைத் தரையிலிருந்து அறுக்க 30 பெண் கூலி | 60 | 00 |
| 16 | நீர் இறைக்கப் பாய்ச்ச 25 நாட்கள் (21/2 மாசங்களுக்கு 3 நாளைக்கு ஒருமுறை 5 ரூபா வீதம்) | 125 | 00 |
| | ரூபா | 893 | 00 |

நல்ல விளைவு 6 மடங்கு 6×6=36 அந்தர்

| | | |
|---|---|---|
| ரூ 22/- வீதம் | 792 | 00 |
| நஷ்டம் ரூபா | 101 | 00 |

குறிப்பு:-

1 எருப்போடாவிட்டால் மூன்று மாசங்களுக்கு குறிப்பிட்ட நிலத்தில் 10 மாடுகளையாவது கட்டவேண்டும். அவற்றைக் காப்பாற்ற குறைந்த பட்சம் ஒருநாளைக்கு ரூபா 2/- வேண்டும். 90×2= ரூபா 180/-

2 இறைப்பதற்குச் சொந்தமான இயந்திரம் இருந்தால் செலவு நாளொன்றிற்கு ரூபா 3/- வேண்டும்.

# தனிவாக்காளர் ஜாபிதா தகராறுக்கு சுமுக தீர்வு
## இலங்கையின் புதிய திட்டம்

கொழும்பு, புதன்

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொண்டவர்களுக்கு பார்லிமெண்ட் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்குவது பற்றிய பிரச்னைக்கு சுமுகமான ஒரு தீர்வுகாண்பதற்கான சில யோசனைகளை இந்திய அரசாங்கத்திடம் விரைவில் இலங்கை சமர்ப்பிக்குமெனத் தெரிகிறது.

மூன்றரை லட்சம் இந்தியர்களையும் மற்றும் இந்திய வம்சாவளியினரான இலங்கைப் பிரஜைகளையும் தனிவாக்காளர் ஜாபிதாவில் வைப்பதென இலங்கையின் முன்னைய அரசாங்கம் தெரிவித்த யோசனைக்கு இந்திய அரசாங்கம் ஆட்சேபம் தெரிவித்தது. இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டம் தயாரித்திருப்பதாகவும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமரும், இலங்கைப் பிரதமரும் அடுத்தமாத மத்தியில் லண்டன் போய்ச் சேரும்பொழுது இதுபற்றி ஆராய்வார்களென்றும் அறியப்படுகிறது.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளப்பட்ட இந்திய வம்சாவளியினருக்கெனத் தனித்தொகுதி ஒதுக்குவது பற்றியும் அல்லது அவர்கள் தமக்கென ஒருபிரதிநிதியை தெரிவு செய்துகொள்ளக்கூடிய முறையில் இரட்டை அங்கத்தவர் தொகுதி ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் இத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஆரம்பமாகப்போவதாயும், மகிடிக்கலப்பு, மலைநாடு முதலிய பல பகுதிகளிலிருந்து கூட இதில் சேர்ந்து படிக்க பலர் முன்வந்துள்ளதாயும் டிப்ளமா பரீட்சை நடத்த, அரியக்குடி அல்லது வேறு பெரிய வித்வான்களை அழைத்துவர ஒழுங்கு செய்துள்ளதாகவும் ஓர் அன்பர் தெரிவிக்கின்றார்.

வித்வான் மகாராஜபுரம் சந்தானத்துக்கு 'விசா' நீடிக்கப்பட்டுவிட்டதாம். அவரது மேலான சேவை நீடித்து ஈழத்துக்குக் கிடைக்க முடிவது பெரிய காரியம்.

நடேசபிள்ளை அவர்கள் அரும்பாடுபட்டு ஆரம்பித்த இந்த மேலான ஸ்தாபனத்தை நீடித்து நடத்த ஈழத்தில் பல கலை அன்பர்கள் முன்வந்து, இசைக் கலை வளர உதவியுள்ளது போற்றத்தக்கது. இந்த ஸ்தாபனத்தில் சங்கீத 'டிப்ளமா'க்களுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவும் முயற்சிகள் நடக்கிறதாம். அண்ணாமலைக்குச் சென்று படிக்கமுடியாதவர்களுக்கு, இந்த ஸ்தாபனம் கிடைத்துள்ளது நல்ல வாய்ப்பாகும். இது ஓங்கி வளருமாக!

* * *

ஆருமறியா இடத்தாய் நீயே ஆகாயந் தேரூர வல்லாய் நீயே, பேரும் பெரிய இலங்கை வேந்தன் பெரிய முடிபத்திறுத்தாய் நீயே ஊரும் புரமூன்றும் அட்டாய நீயே, ஒன்றலரையாலும் மாலுங் கூடித், தேடும் அடியென்மேல் வைத்தாய் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ.

## ஐயாறன் எழுதுவது

பர்மாவிலிருந்து அகதியாக வந்த ஓர் இளம்பெண், இந்தியா வந்தபின் ஏமாற்றத்தால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாக ஒரு சென்னைப் பத்திரிகையில் செய்தியைப் பார்த்தேன். மிக வருத்தமாக இருந்தது இலங்கையிலிருந்தும் முன்பிகளுக ஐந்து லட்சம் அகதிகள் இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடாகியுள்ளதல்லவா? அவர்களில் யாருடைய நிலையுமிப்படி ஆகக்கூடாதே என்று கவலையாக இருந்தது.

மதுரைக்குப் பக்கத்திலே திருப்பரங்குன்றத்துக்கு அப்பால் ஒருமைல் தூரத்துக்குள்ளிருக்கும் திருநகர் எல்லையில் பர்மா அகதிகள்முகாம் ஒன்று இருப்பதாக அறிந்தேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வித அகதிகள் முகாம் உள்ளதாம். மதுரை மாவட்டத்திலுள்ள இந்த முகாமில் உள்ளவர்களை நேரில் பார்த்து அவர்களது சுகதுக்கங்களை விசாரிக்கச் சென்றேன்.

முகாமில் ஒரு பொலிஸ் காவற்கூடமுள்ளதாயும் அவர்களிடம் அனுமதி பெற்றே முகாமிலுள்ளவர்களுடன் பேசலாமென்றும் அறிந்தேன். அது காலைவேளை, மேடான பகுதியில் சுமார் 200 ஓலைக்குடிசைகள் போட்டுள்ளனர். மின்சாரவிளக்கு, தண்ணீர்க்கிழாய் முதலிய வசதிகள் செய்துள்ளனர். அங்கு நின்று கொண்டிருந்த ஒரு வாலிபரிடம்பேச்சுக் கொடுத்தேன். அவர் தம் இளம் மனைவியுடனும் நான்கு குழந்தைகளுடனும் பர்மாவை விட்டுப் புறப்பட்டு வந்ததாகவும் அங்கு யாரும் தம்மை வெளியேறும்படி கஷ்டப்படுத்தவில்லை என்றும், ஆனால் இந்தியர் அங்கு மரியாதையுடன் வாழமுடியாமல் துவேஷம் அதிகரித்திருப்பதாயும் அதனால்தான் சுமார் 400 ரூபாய் வருமானத்தையும், வீடு, நிலம் இவற்றையும்விட்டுவிட்டு இந்தியா வந்ததாகவும் சொன்னார்.

குளித்துவிட்டு சமைத்துக் கொண்டிருந்த அவரது மனைவியும் இச்சமயம் வந்து, இந்தியா வந்தால் கஷ்டமிருக்குமென்பது தெரியுமென்றும் என்னாலும் மானம் மரியாதையுடன் வாழவே இந்தியா வந்ததாகவும் தெரிவித்தார்.

இருவரும் சந்தோஷமாகவே காணப்பட்டனர். கப்பலில் எல்லா வசதியும் செய்திருந்தனராம். ஒருநாளைக்கு அக்குடும்பத்துக்கு இந்திய அரசாங்கம் 4 ரூபாய்வீதம் உதவிப்பணம் அளிக்கிறது. 80 நாட்களுக்கு இப்படிக் கொடுக்குமாம், பின்னர் 15 நாட்களுக்கு ரூபா 2-40வீதம் தருமாம். அதற்குள்ளாக அவர்கள் தங்களுக்கான ஏதாவது வேலை தேடிக் கொள்ளவேண்டும். 45 நாட்கள்தான் அந்த முகாமில் அவர்கள் இருக்க முடியுமென்று கேள்விப்பட்டேன். தாங்கள் அங்கு வந்து நாட்களாவதாயும், தான் ஒரு மின்சார தொழிலாளியென்றும், வேலைக்காக விசாரித்து வருவதாயும் வேலை கிடைக்கலாமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏற்கனவே 50 ஆயிரம் அகதிகளுக்குமேல் பர்மாவிலிருந்து வந்துள்ளனராம். இன்னும் பல லட்சம்பேர் அங்கிருந்து வர இருப்பதாகவும் அறிந்தேன்.

இந்தியாவில் எவ்வளவோ அபிவிருத்திகள் ஏற்பட்டு வருகின்றனதான். பலருக்கும் முன்னைவிட அதிக வேலை வாய்ப்புகள் உண்டு. ஆனாலும் இலங்கையிலிருந்தும் 5 லட்சம் பேர் அகதிகளாகவந்தால் அவர்கள் புதிதாகக் காலூன்றி வாழ்க்கை நடத்து...

சுன்னாகத்திலே இராமநாதன் சங்கீத அகாடமி நாளை வெள்ளிக்கிழமை மீண்டும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாக். ராணுவ விமானங்கள் இந்தியாவழியாகசெல்லமுடியாது

## டில்லி தடை விதித்தது

புதுடில்லி, மே 12

பாகிஸ்தான் ராணுவ விமானம் எதுவும் பாரத பிராந்தியத்தின் வழியாகப் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு மந்திரி திரு. சவான் ராஜ்யசபையில் அறிவித்தார். மேற்கு பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்கு பாரத பிராந்திய வழியாக விமானப் போக்குவரத்து நடைபெற்றது.

அனுமதி பெருத ராணுவ சாதனங்கள் ஏற்றப்பட்டிருந்த பாகிஸ்தான் விமானம் ஒன்று மேற்கு பாகிஸ்தானுக்கே திருப்பியனுப்பப்பட்டது என்றும் அவர் ஊர்ஜிதம் செய்தார்.

"இந்தியாவின் சகல எல்லைகளிலும் நாம் முழு ஆயுத வலிமையுடன் இருக்கிறோம். ராஜஸ்தான் உட்பட்ட சகல இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது" என்றும் திரு. சவான் குறிப்பிட்டார்.

கிழக்கு, மேற்கு எல்லைகளில் பாகிஸ்தானியர் சுட்டுவருகிறுர்கள் என்றும், இந்தியா திருப்பிச் சுட்டுவருவதாயும் அவர் மேலும் கூறினுர்.

லத்திதீபா—துமாபாரிஎல்லைகளில் பாகிஸ்தான் சுட்டபோது திருப்பித்தாக்கியதில் 4 பாகிஸ்தான் நிலஅறைகளுக்குக் கடுஞ்சேதம் விளைவிக்கப்பட்டதாயும், 15 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் என்றும் அவர்மேலும்கூறினுர்.

# 160 தெ. வியட்னும் துருப்புக்கள் பலி

சைகோன், மே 12

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒரு சண்டையில் வியட்காங்கியர் 160 அரசாங்கத் துருப்புக்களைக் கொன்று, 28 பேரைக் காயப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆர்ப்பாட்டம்

மக்கா, மே 12

ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டதை குறித்து இங்கு கூடிய முஸ்லிம் மகாநாடு கண்டனம் தெரிவித்திருக்கிறது.

லண்டனில், ஷேக்அப்துல்லா கைதுசெய்யப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் இந்திய ஹைகமிஷன் காரியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## உளவுகூறியவருக்கு 21 ஆண்டு சிறை

லண்டன், மே 12

52 வயதான பிரிட்டிஷ் ராக்கெட் என்ஜினியர் ஒருவருக்கு ரஷ்யாவுக்கு ராணுவஇரகசியங்களைக் கொடுத்ததற்காக 21 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

38 வயதான மற்ருேர் இராணுவ அதிகாரி ஈராக், ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு ராணுவ இரகசியங்களைக் கொடுத்ததற்காக 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.



# 4-ம் டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிந்தது

பிரிஜ்டவுன், மே 12

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு மிடையே நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட் எக்கட்சிக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. ஸ்கோர் விபரம் வருமாறு:

**ஆஸ்திரேலியா**

1-ம் இன்னிங்ஸ 6 விக்கெட்டுக்கு 650 ரன்கள்.
2-ம் இன்னிங்ஸ் 4 விக்கெட்டுக்கு 175 ரன்கள்.

**மேற்கிந்தீஸ்**

1-ம் இன்னிங்ஸ் 573 ரன்கள்.
2-ம் இன்னிங்ஸ் 5 விக்கெட்டுக்கு 242 ரன்கள்.

(இன்னும் 11 ரன்களை எடுத்திருந்தால் இந்த டெஸ்டிலும் மேற்கிந்தீஸ் வென்றிருக்கும். எனினும் மொத்தம் 4 டெஸ்களில் அது 2-ல் வெற்றிபெற்றுவிட்டதால் ஏற்கனவே உலக "ரப்பருக்கு" அது தகுதி பெற்றுவிட்டது.

# லண்டனில் முதலாவது சைவ ஹோட்டல்

லண்டன், மே, 12

லண்டனில் இந்தியருக்குச் சொந்தமான முதலாவது சைவ ஹோட்டல் திறக்கப்பட்டிருக்கிறது.

ஓவியரும், கவிஞரும், ஹோட்டல் சொந்தக்காரருமான ராமேஷ்படேல், வர்த்தகர் சுரேஷ் சோக்சி ஆகிய இருவரும் கூட்டாகச்சேர்ந்து இதை ஆரம்பித்துள்ளனர்.

"ஹோட்டல் ஷாகுன்" என்ற இந்த ஹோட்டலில் இந்திய சிற்றுண்டிச்சாலை, இந்திய சைவஉணவு விடுதி ஆகியவையும் அடங்கியுள்ளன. லண்டன் கிரேட் ரஸல் தெருவில் அமைந்துள்ள இந்த ஹோட்டலின் திறப்புவிழாவில் இந்திய ஹைகமிஷனரும், மற்றும் பிரபலஸ்தர்களும் கலந்துகொண்டார்கள்.

திறப்புவிழாவுக்கு ஜனுதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் சாஸ்திரி, உள்நாட்டு மந்திரி நந்தா, மற்றும் இந்திய மந்திரிகள், பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், முன்னுள் மந்திரி ரெஜினுல்ட் மால்டிங் ஆகியோரிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன. இலங்கை ஹைகமிஷனர், நேபாளதூதர் மொரீஷியஸ கமிஷனர் ஆகியோர் திறப்புவிழாவில் கலந்து கொண்டனர்.

புதிய ஹோட்டலில் சுத்த சைவ சாப்பாடு கிடைக்கும். இந்தியாவின் சில பகுதிகளில் இருக்கும் வழக்கப்படி தனித்தனி பிரிவுகளைக் கொண்ட வட்டமான உலோகத்தட்டுகளில் உணவு படைக்கப்படுகிறது. இந்தியரல்லாத அபிமானிகள் இதனை ருசிபார்க்குமாறு ஊக்குவிக்கப்படுகிறுர்கள். உணவு விடுதியுடன் இணைந்த ஹோட்டலில் 18 அறைகள் இருக்கின்றன.

# சாஸ்திரி ரஷ்யா புறப்பாடு: ஒருவார உத்தியோக விஜயம்

புதுடில்லி, மே. 12

இந்தியப் பிரதமமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி சோவியத் ரஷ்யாவில் ஒருவாரம் உத்தியோக ரீதியில் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொருட்டு இன்று காலை மாஸ்கோ புறப்பட்டார்.

ரஷ்யத் தலைவர்களுடன் அவர் 4 தினங்களில் பேச்சுக்கள் நடத்துகிறுர். நாளை இப்பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன. லெனின் கிராட், கீவ், டாஷ்கண்ட் ஆகிய நகரங்களுக்கும் அவர் விஜயம்செய்வார்.

டில்லி பாலம் விமானநிலையத்தில் மத்தியமந்திரிகளும், எம். பி. க்களும், ராஜதந்திர தூதர்களும், ரஷ்ய தூதராலய அதிகாரிகளும், பெருந் தொகையான பொதுமக்களும் அவரைவழியனுப்பிவைத்தனர்.

திரு. சாஸ்திரியை வரவேற்குமுகமாக மாஸ்கோவில் அவர் செல்லும் 35 கிலோமீட்டர் நீளமான பாதை பிரமாதமாக அலங்காரம்செய்யப்பட்டிருப்பதாக மாஸ்கோ செய்திகள் கூறுகின்றன. ரஷ்ய மொழியிலும், ஹிந்தியிலும் பெரிய வரவேற்பு சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன, பிரதம மந்திரி திரு கொஸிஜின் அவரை வரவேற்று அழைத்துச்செல்வார்.

சென்ற யுத்தத்தில் 2 கோடிக்கு மேலான ரஷ்ய ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டதன் நினைவுதினம், அனுஷ்டிக்கப்பட்டபின், திரு. சாஸ்திரியின் வருகையை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாய் மாஸ்கோ வானெலி அறிவித்தது: இந்தியாவின் மகத்தான நேச நாடாக ரஷ்யா விளங்கிவருவதாயும், இரு நாடுகளின் நட்புறவினுல் உலகில் சமாதான சக்தி பலப்படும் என்றும், திரு. சாஸ்திரி புறப்படுமுன் கூறினுர்.

## அமெரிக்க தங்க இருப்பு குறைவு

வாஷிங்டன், மே 12

அமெரிக்க தங்கக் கையிருப்பில் கடந்த 4 மாதங்களில் 100 கோடிடாலர்குறைந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## அசோக்மேத்தா

மாஸ்கோ, மே12

இந்திய திட்டக்கமிஷனின் உபதலைவர் திரு அசோக்மேத்தா 4ம் திட்டத்திற்கான ரஷ்ய உதவி பற்றிய யோசனைகளை சோவியத் அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருக்கிறுர்.

## ரஷ்யகிரகம்

மாஸ்கோ, மே12

ரஷ்யா சந்திரனுக்கு அனுப்பிய ஆளில்லா கிரகம் இன்று அதில் இறங்குமென இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## சுடுவதை நிறுத்துக

கராச்சி, மே 12

லத்திதீல துமாபாரி பகுதியில் இந்தியா கடுமையாகச் சுட்டுவருவதாகவும், உடனடியாக இதைநிறுத்துமாறும்பாகிஸ்தான் கேட்டுக்கொண்டிருக்கிறது.

## 5 அமெரிக்கர் மாண்டனர்

சைகோன், மே 12

வியட்காங்கியருக்கும் அமெரிக்கருக்கு மிடையே நேற்று நடைபெற்ற நேரடி மோதலில் 5 அமெரிக்கர் மாண்டனர். 13 பேர் காயமடைந்தனர்.

## பாக். தூதராலயத்தை மூட உத்தரவு

புதுடில்லி, மே 12

ஷில்லாங்கிலுள்ள பாகிஸ்தான் உதவி ஹைகமிஷன் காரியாலயத்தை வருகிற 15-ம் திகதியிலிருந்து மூடிவிடும்படி இந்தியவெளிநாட்டமைச்சு உத்தரவிட்டிருக்கிறது. இந்த தூதராலயம் இந்திய விரோத சதி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருவதாய் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

# வில்சனின் யோசனை திருப்திகரமாக உருவாகிவருகிறது

— சாஸ்திரி

புதுடில்லி, மே 12

கட்ச்—சிந்து எல்லையில் திரு. வில்சனின் சமாதான முயற்சி திருப்திகரமான தீர்வுக்கு உருவான யோசனையுடன் படிப்படியாக வகுக்கப்பட்டிருப்பதாக சாஸ்திரி கூறினுர். எனினும் இறுதிவாசகம் இன்னும் கிடைக்கவில்லை என்றும் ஜனவரி 1-ம் திகதி இருந்த நிலை ஏற்படவேண்டும் என்பதே இந்தியாவின் கொள்கை என்றும் அவர் கூறினுர். "பாகிஸ்தானின் நிலையை நம்மால் செவ்வனே சமாளிக்கமுடியும், தேவையானுல் பாகிஸ்தானுக்கு செம்மையான அடிகொடுக்கவும் நம்மால் முடியும்" என்றும் அவர் கூறினுர்.

அடுத்துவரும் மாதங்களில் இந்தியாவின் எல்லைகள் மேலும் பலப்படுத்தப்படுமென்றும் அவர் தொடர்ந்து கூறினுர்.

# அப்துல்லாவை சந்திக்க முயன்ற பிரிட்டிஷ் நிருபர்

## 14 நாள் காவலில் வைக்கப்பட்டார்

புதுடில்லி, மே. 12

உதகமண்டலத்தில் ஷேக் அப்துல்லாவை சந்திக்க முயன்ற பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டு 14 நாள் காவலில் வைக்கப்பட்டார்.

இவர் பொய்யான பெயரைக் கொடுத்து, அப்துல்லாவைச் சந்திக்க தாம் அதிகாரபூர்வமாக அனுமதிபெற்றிருப்பதாக அதிகாரிகளிடம் கூறினுராம். தாம் தார்மீகபுனருத்தாரண ஊழியர் (எம். ஆர். ஏ) எனக் கூறி ஷேக்கைச் சந்திக்க அவர் முயன்றுர்.

லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடம் இதுபற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் காமன்வெல்த் உறவுமந்திரி திரு. பொட்டம்லி இந்த நிருபர் கைதுசெய்யப்பட்டது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு டில்லியில் உள்ள பிரிட்டிஷ் ஸதானிகரைக் கேட்டிருக்கிறுர்.

## அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி

வாஷிங்டன், மே 12

அமெரிக்கா வருகிற சனிக்கிழமை புதிய அணுசக்தி நீர்மூழ்கி ஒன்றை சேவையில் ஈடுபடுத்தும்.

# பாகிஸ்தான் எல்லையில் 3,60,000 இந்திய துருப்புக்கள்?

## கராச்சி குற்றச்சாட்டு

வாஷிங்டன், மே 12

கட்சில் பாகிஸ்தானின் சண்டித்தனம் நீடிப்பது காரணமாக, அதை எதிர்த்து இந்தியா வேறேரிடத்தில் போர்முனையை ஆரம்பிப்பதைத் தடுக்க ராஜதந்திர வழிகளில் அமெரிக்கா முயற்சிகளைத் தீவிரமாக்கிவருகிறது,

இதற்கிடையில் 20 டிவிஷன் துருப்புகளில் பெரும்பாலானவற்றை மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் எல்லைகளில் இந்தியா நிறுத்திவைத்திருப்பதாய் பாகிஸ்தான் குற்றஞ் சாட்டியிருக்கிறது.

மேற்கு பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் 10 டிவிஷன்களையும், கிழக்கு பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் 2 டிவிஷன்களையும் இந்தியா நிறுத்தி வைத்துள்ளது என்றும், மேற்கொண்டு 6 டிவிஷன்கள் கிழக்கு பாக். எல்லையிலுள்ள படைகளுக்கு பக்கபலமாகநிறுத்தப்பட்டிருக்கிறது என்றும் பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்தியத் துருப்புகளின் எண்ணிக்கையைத் தாம் தெரிவிப்பதற்கில்லையென்றும், ஆனுல் இந்திய ராணுவத்தில் ஒரு டிவிஷன் 20,000 துருப்புக்களைக் கொண்டது எனக் கருதுவதாயும் பாகிஸ்தான் அதிகாரி மேலும் கூறினுர். எனவே எல்லைப் பகுதியில் 360000 துருப்புக்களை இந்தியா குவித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் அவசர அவசரமாக மற்ருேர் கவசப் படையை இந்தியா திரட்டியுள்ளதாயும் இந்திய ராணுவத்தில் பெரும்பகுதி போர் நிலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாயும் பாக். ராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறினுர்.

## ரஸ்க் லண்டன் புறப்பாடு

லண்டன், மே 12

லண்டனில் நடைபெறும் நேட்டோ மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் வாஷிங்டனிலிருந்து புறப்பட்டார்.

## ஜெர்மனியில் தமிழ் ஆராய்ச்சி

பொன், மே 12

மேற்கு ஜெர்மனியிலுள்ள பழம்பெரும் பல்கலைக் கழகங்களில் ஒன்றுன ஹைடல்பர்க் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் இந்தியா-ஆசியா கழகம் நிறுவப்பட்டிருக்கிறது. தமிழ், ஹிந்தி, உருது, வங்காளி, ஆகிய மொழிகளில் இங்கு ஆராய்ச்சி நடைபெற்றுவருகிறது.

சைகோன், மே 12

டில்லியிலிருந்து இங்குதிரும்பிய தென்வியட்னும் உதவிப் பிரதமர், வியட்னும் பிரச்னையை இந்தியத் தலைவர்கள் நன்கு புரிந்துகொண்டிருப்பது தமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறதுஎனக் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உரிமைகள் கிடைக்க உழைப்போம்"

## கிளிநொச்சியில் மந்திரி திருச்செல்வம்

கிளிநொச்சி, புதன்

"தேசிய அரசாங்கத்தில் சிறுபான்மையோரின் உரிமைகள் கிடைக்கக் கூடிய வகையில் சுமூகமான வழிவகைகளைக் கையாண்டு எல்லா அமைச்சர்களுடனும் ஆலோசனை செய்து நல்ல முடிவைப்பெற்றுத்தர நான் பாடுபடுவேன். நான் இரு கட்டுப்பாட்டுக்கு இணங்கத்தான் இங்கு சமூகம் கொடுத்துள்ளேன். ஒன்று எமது கட்சியின் கட்டுப்பாடு அமைய வேண்டும். மற்றது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைய வேண்டும். இதனால் தமுக்கியோ அல்லது போற்றியோ, கண்டித்தோ பேச முடியாது. எங்களைக் குறைகூறும் மாற்றுக் கட்சியினர் தான் பல பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டவர்கள். தொல்லைகளை ஆரம்பித்த மாற்றுக்கட்சியினர் இப்போ பிரிவினையை ஏற்படுத்த முயல்கின்றார்கள். இதற்குத்தமிழரசுக் கட்சி ஒருபோதும் விட்டுக் கொடாது. கரைச்சிக் கிராம சபையின் வருமானத்தை நோக்கும் போது இப்பகுதியில் ஒரு பட்டின சபையும் மூன்று கிராம சபையும் அமைக்கலாம். இதற்கு நான் மிக விரைவில் எனது அதிகாரிகளை அனுப்பி தேவைப்படும் புள்ளி விபரங்களைத் தயாரித்து விரைவில் பட்டினசபையாக்குவேன். இப்பகுதி மக்கள் பெரிதும் நன்மை அடைவர். அத்துடன் விரைவில் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி நிர்வாக மொழியாக அமுலாக்க உதவி புரிவோம்"

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதி மக்களால் பண்டிதர் கா. போ. இரத்தினத்திற்கும் தமக்கும் இதர தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கூறினார்.

இப்பகுதிப் பிள்ளைகள் மேல் படிப்பு படிக்கும் நோக்கத்துக்காக ஒரு உயர்தரப் பாடசாலையை அமைக்க தேசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளதென்றும் அமைச்சர் கூறினார்.

பருத்தித்துறைப் பிரதிநிதி க. துரைரத்தினம் பேசுகையில், உள்ளத்தில் உணர்ச்சிகளை தவறான பாதையில் செல்ல விடாது நிதானத்துடனும் நேர்மையுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் நாம் தொடங்கிய பயணத்தை தொடர்ந்து நடாத்துவதற்கு ஆயத்தமாய் இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் பேசுகையில்:

சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் நடைமுறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அதில் பாடசாலை, வைத்தியசாலை, வீதிகள் முதலியன அடங்குமென்றும் கூறினார்.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

மாற்றுக் கட்சியினர் எமது கட்சிக்கு எதிராக பல வதந்திகளையும் வசைமாரிகளையும் பொழிவதனால் எமது கட்சி கீழ்த்தரப்படாது. தமிழர் என்ற பெயரில் நாம் ஒன்றுபட்டு ஒத்துழைத்து எமது இனத்தின் உரிமைகளுக்காகப் போராட வாருங்கள் என்று அவர்களைக் கேட்கிறேம். எமது உரிமைகள் கிடைக்கும் என்ற ஒரு நோக்குடன் தான் எமது கட்சி ஐக்கியதேசியக் கட்சியுடன் அரசாங்கம் அமைக்க சேர்ந்து கொண்டது. எல்லாவற்றையும் நன்கு ஆலோசித்த்தான் ஒருமுடிவுக்கு வந்தோம். எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத எந்த அரசாங்கத்துக்கும் நாம் எமது ஆதரவைக் கொடுக்க மாட்டோம் என்றுதான் தேர்தலுக்கு முன்னும் பின்னும் கூறுகிறேம். இவ்வரசாங்கமும் எமது கோரிக்கைகளை மறுக்கும் பட்சத்தில் எமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

மற்றும் வின்சென்ட், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தம்பிமுத்து, திருஸ்ரீகாந்தரூபன் ஆகியோரும் பேசினர். கூட்டத்திற்கு திரு ஏ. எஸ். முருகேசு தலைமைவகித்தார்.

REGAL – JAFFNA
NOW SHOWING
PETER CUSHING
in
NIGHT CREATURES
(Eastman - Color)

## வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், வியா.

சங்கானையைச் சேர்ந்த நல்லதம்பி மயில்வாகனம் (20வயது) என்பவர் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

இவரது மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையில் இறந்தவரின் தந்தை நல்லதம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "இறந்தவரை அவரது மச்சாளுக்குத் திருமணம் செய்துவைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. 6 மாதகாலத்துக்கு முன்னரே இந்த ஏற்பாடுகள் முடிந்திருந்தன. சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு 8-00 மணிக்கு அவர் வீட்டுக்குத் திரும்பினர். வழக்கம்போல அவரது மச்சான் வீட்டுக்குப் போய்விட்டுத் தான் வந்தார். சாப்பிட்டு விட்டு அறையொன்றுக்குள் விருந்து நச்சுத்திராவகப் போத்தல் ஒன்றுடன் வெளியே வந்தார். என்ன இதென்று நாங்கள் கேட்டதற்குத் தாம் அதைக் குடித்துவிட்டதாகச் சொன்னர்.

ஜோசேவ்வரி என்பவர் சாட்சியமளிக்கையில் வழக்கம் போலவே அன்றும் வீட்டுக்கு வந்து தம்முடன் சந்தோஷமாகக் கதைத்தாரென்றும் இறந்தவரின் மரணத்திற்கான காரணம் குறித்துத் தமக்கு ஒன்றுமே அறியமுடியாமலிருக்கிறதென்றும் கூறினர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணையை நடத்தினர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.



யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி செல்வி சிரோன்மணி செல்லையாவின் பரத நாட்டியக் கச்சேரி நாளை வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் தொல்புரம் வழக்கம்பரை மாரியம்மன் கோவில் புனருத்தாரண நிதிக்காக நடைபெறுகிறது.

## 'அறிஞர்களை வருவிக்க அனுமதி தருக'

யாழ்ப்பாணம், வியா.

இந்தியாவிலுள்ள புனிதஸ்தலங்களுக்கு இலங்கையிலிருந்து யாத்திரை செய்யும் அன்பர்களுக்கு 'பாஸ்போட்' வழங்கிச் சிரமம் இன்றிச்செல்ல வசதியளிக்க வேண்டும் எனவும் இந்தியாவிலிருந்து சமயப் பேரறிஞர்கள் இலங்கைக்குவந்து சமய உபந்நியாசங்களை நிகழ்த்த அநுமதிதர வேண்டும் எனவும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் சாந்தையர் மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய தர்ம பரிபாலன சபை நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு திரு. வை. செல்லையா தலைமை வகித்தார்.

## நேரு பெயரில் ஜேர்மன் பரிசு

பொன், மே 12

காலஞ்சென்ற நேரு நினைவாக அவரது பெயரில் ஆண்டு தோறும் பரிசு ஒன்றை வழங்க மேற்கு ஜேர்மன் அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. இப் [illegible]

## 'பாலர் வகுப்பு ஆரம்பிக்க வேண்டும்'

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து நீக்கப்பட்ட பாலர் வகுப்புகளை மீண்டும் நடாத்தும்படியும் இவ்வகுப்புகளின்மையால் நெல்லியடியைச் சேர்ந்த சிறார்கள் அதிகதூரம் நடந்து சென்று படிக்கவேண்டியிருப்பதால் பெற்றோருக்குத் தினமும் அவர்களைக் கூட்டிச்சென்று திரும்பவும் கூட்டிவரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இச்சிரமத்தைப் போக்குமுகமாக நெல்லியடியில் பாலர் வகுப்புக்களைக் கட்டாயம் நடாத்தவேண்டும் என்றும் கோரும் மகஜரை முன்னுள் கரவெட்டி கிராம சபை அங்கத்தவர் திரு. த. கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் சென்ற கோஷ்டிக்குழு உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரத்திடம் சமர்ப்பித்தது.

இக்கோரிக்கையைப் பரிசீலனைசெய்த திரு மு. சிவசிதம்பரம், 'நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலயத்தை வடமராட்சியிலேயே ஓர் உயர்தர விஞ்ஞானக் கல்லூரியாக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதால் பாலர் வகுப்புகளுக்கு இனிமேல் அங்கு இடமில்லையென்றும் பாலர் வகுப்பை இங்கு வைக்குமாறு வற்புறுத்தினுல் அது ஓர் சிறந்த கல்லூரியின் முன்னேற்றத்திற்குத் தடையாக முடியும் என்றும் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையை கலவன் முறையில் நடாத்துவதற்கு முயற்சி செய்வதால் அங்கு சிறுவர்களைப் படிக்கவிடலாம் என்றும் கூறினர்

## சைக்கிள் திருட்டு

உடுப்பிட்டி, செவ்.

கன்னியடியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரின் புதிய றலி சைக்கிள் நெல்லியடிச் சந்தியில் வைத்த இடத்தில் காணுமற் போய்விட்டது. பூட்டப்பட்டிருந்த இச்சைக்கிள் திருட்டுப் போய்விட்டது. இதுபற்றிப் பருத்தித்துறைப் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## 'அரிசியில் வெட்டு இல்லை'

வத்தளை, புதன்

'தற்பொழுது அரிசி கொடுக்கப்படும் முறையில் எதுவித மாற்றமும் இருக்காது. சிலர் அரிசி கொடுப்பதில் வெட்டு நடைபெறலாம் என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். இந்த வதந்தியினுல் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்' என்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. பாரிஸ் பெரேரா தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டமொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:- நாட்டில் பணம் இல்லாது மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். திறைசேரியிலும் போதிய பணம் இல்லை. அப்படியிருந்தபோதிலும் அரசாங்கம் வேண்டிய அபிவிருத்தித்திட்டங்களை கையாண்டு நாட்டின் பொருளாதாரத்தை பெருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## வேலைவேண்டுவோரின் சிரமதானப்பணி

உடுப்பிட்டி, புதன்

அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சிரமதான இயக்கம் 17 நாட்களாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது. நேற்றைய 17 வது தினத்தன்று ஒராம் கட்டை கற்கோவள வீதியின் சீரமைப்புத்திட்டம் நடைபெற்றது. மாதனை, வல்லுரை வீரபத்திரகோவிலடி முதலிய இடங்களிலுள்ள ஒடுக்கமான போக்குவரத்திற் கிடைஞ்சலாகவுள்ள ஒழுங்கைகளை அகலப்படுத்துவதில் சிரமதான இயக்கத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். புலோலி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரும் இவ்வேலையில் கலந்துகொண்டனர். சாதிமதபேதமின்றி அனைவரும் தொடர்ந்து சிரமதான இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வடமராட்சிப்பகுதிக் காரியாதிகாரி ஜே. டி. ஆர்னல்ட், வடமராட்சிப் பகுதிக் கிராம சேவகர்கள் முதலியோரும் இச்சிரமதானப்பணியில் உதவிசெய்து வருகின்றனர்.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மொடேர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (சண்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மயலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன் சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

# "ஏன் குத்துப்படுகிறீர்கள்? என்று கேட்டவரையும் குத்தினர்"

## மந்துவில் இரட்டைக் கொலை வழக்கில் மாண்டவரின் சகோதரர் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மந்துவில் இரட்டைக் கொலை வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு ஹெூபர்ட் சில்வா முன்னிலையில்நேற்றுஆரம்பமாகின. இவ்வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு ஆண்களும் பெண்களுமாக கோர்ட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பலர் குழுமியிருந்தனர்.

இவ்வழக்கில் மந்துவில்மயானத்தில் கணபதி சுப்பிரமணியம், கணபதி சித்திரன் இருவரையும் கொலை செய்ததாகவும் கிட்டினரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் ஆகிய இருவர்மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதுவரை காலமும் தலைமறைவாக இருந்த இரண்டாம் எதிரி நவரத்தினம் இதற்கு மூந்திய தவணையில் கோர்ட்டில் சரணடைந்திருந்தார்.

எதிரிகள் சார்பில் திரு. வி செல்லத்தம்பி, திரு. சி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவிடன் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். முதலாவது சாகிட்யாக பிரேதபரிசோதனை செய்தடாக்டர் நல்லையா சாட்சியமளித்தார். அதன்பின்னர் கொலையுண்டவர்களின் இளையசகோதரர் கணபதி ரத்தினம் சாட்சியமளித்தார். அவர் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

"இந்த வருடம் சித்திரை மாதம் 19-ம் திகதி மந்துவிலில் இறந்த ஒரு பெண்ணின் பிரேதத்தைத் தகனம் செய்வதற்காக மயானத்தில் விறகுகளை அடுக்கிக் கொண்டிருந்தேன், என்னோடு கொலையுண்ட எனது சகோதரர் இருவரும் எதிரிகளும், கிட்டினரும் விறகு அடுக்கிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் கிட்டினருக்கும் நாகமுத்துவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நாகமுத்து தனது மடியில் இருந்த கத்தியை எடுத்துக் கொண்டு கிட்டினருக்குக் கிட்டப் போனார். கிட்டினர் பின்னேக்கி மயானத்தில் இருந்த மடத்தடிக்குச் சென்றார். அவர் மடத்தடியை நெருங்கியதும் முதலாம் எதிரி கத்தியால் அவரது தோளில் குத்தினர். குத்துப்பட்டவுடன் கிட்டினர் மடத்தின் உள்ளே சென்றார் நாகமுத்துவும் பின்தொடர்ந்து உடனே நுழைந்தார். அப்பொழுது எனது சகோதரர் சுப்பிரமணியம் மடத்தின் வாசலுக்கு வந்து நாகமுத்துவிடம் "ஏன் குத்துப்படுகிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு நாகமுத்து "நீயார் அதைக் கேட்க?" என்றுகேட்டுக்கொண்டு சுப்பிரமணியத்தின் நெஞ்சில் அந்தக் கத்தியால் குத்தினர், சுப்பிரமணியம் உடனே நிலத்தில் சாய்ந்தார். அவர் நிலத்தில் சரிந்தபொழுது இரண்டாம் எதிரி ஒரு கோடரியினால் சுப்பிரமணியத்தின் தலையில்வெட்டினர். அவர் நிலத்தில் விழுந்து புரண்டார். எதிரிகள் இருவரும் பின்னர் அங்கு நின்ற சித்திரனைத் துரத்திக்கொண்டு போனார்கள். நான் வேறு வழியால் மந்துவில் விதானையார் வீட்டிற்குச் சென்றேன், பின் விதானையுடன் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன். அப்பொழுது எனது சகோதரர் சுப்பிரமணியம் இறந்து கிடந்தார்."

எதிரிகளின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தார். மேல்விசாரணை அடுத்தவாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

### கூட்டுப்பிரார்த்தனை

சாவகச்சேரி, புதன்

சங்கத்தானை வைரவசுவாமி, கந்தசாமி கோவில் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆதரவில் வெள்ளிக்கிழமை கோவில் மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனையும், சொற்பொழிவுகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. பிரார்த்தனையின்போது திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் "முருகன் பெருமை" என்னும் .... பற்றிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெறும்.

---

### கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய கைப்பந்தாட்டக் கழக 2-வது வருட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி வெகு விரைவில் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

---


## வர்த்தகக் கணக்கியல் கல்லூரி

(சீதா சோடா பக்டரி முன்னுல்)

330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஆண், பெண் இருபாலார்க்கும் கீழ்க்காணும் பாடங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் தராதரம்பெற்ற உபாத்தியாயர்களால் போதிக்கப்படும்.

கணக்கியல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, வர்த்தக எண் கணிதம், வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம்.

வகுப்பு நேரம்: காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை
மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

ஆங்கிலப் பாஷையும் சிங்களமும் கற்றுக்கொடுக்கப்படும்.

பெண்களுக்கு பிரத்தியேக முழுநேர வகுப்புகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும்.

விபரங்கட்கு நேரிலோ அல்லது கடிதமூலமாகவோ 20-5-65 க்கு முன் விண்ணப்பிக்கவும்.



தொல்புரம், வழக்கம்பரை மாரியம்மன்கோவில் புனருத்தாரண நிதிக்காக

மே மாதம் 14-ந் திகதி (14-5-65) வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணியளவில்

யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில்

செல்வி சிரோன்மணி செல்லையா

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியின்

## பரதநாட்டியக் கச்சேரி

நடைபெறும்;

ரிக்கட்: றிசேவ்ட் ரூபா 10-00 ரூபா 5, 3, 2.


# புகைவண்டி மோதி இளம்பெண் மரணம்

பயகல், புதன்

வேலை செய்யும் மூன்று பெண்மணிகள் புகையிரதப் பாதையில் நடந்துகொண்டு செல்லுகையில் அவ்வழியால் சென்ற புகைவண்டியொன்றினால் மோதுண்டு ஒருவர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார். மற்றவர் கடுமையான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அருணவதி குணசேகராவின் மரணவிசாரணையின் போது மேறகண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

டொனு லீலாவதி (23) சாட்சியத்தின் போது குறிப்பிட்டதாவது;-

நாங்கள் மூவரும் 'எலாஸ்டோர்' தொழிற்சாலையில் வேலைபார்க்கின்றோம். வழக்கத்தில் நானும் எனது இரு சிநேகிதிகளும் பஸ் மூலம்தான் பிரயாணம் செய்வோம். குறிப்பிட்ட தினத்தன்று பஸ் சீரான முறையில் இல்லாததால் நாங்கள் புகையிரதப் பாதை வழியாக நடந்து செல்லத் தீர்மானித்தோம். இறந்தவர் பாதையின் நடுவழியாகவே சென்றார். அழுத்கம புகைபிரத நிலையத்தில் ஒரு புகைவண்டி நிற்பதைக்கண்டு நாங்கள் மறு புகைவண்டிப்பாதைக்குச் சென்ற பொழுது அண்மையில் மற்றோர் புகைவண்டியைக் கண்டோம். நான் சத்தம் செய்துகொண்டு பாதையை விட்டுப் பாய்ந்தேன். நான் ஒருவித காயமுமின்றி தப்பிக்கொண்டேன். ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். மற்றவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. யு. எம். எம். சாலி விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

### ரூ. 30,000 வழிப்பறி

கேகாலை, புதன்

கேகாலை வங்கியில் பணம் கட்டுவதற்குச் சென்ற கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் குமாஸ்தா வழியில் கொள்ளைக் கோஷ்டியொன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டு அவர் கொண்டு சென்ற முப்பதினாயிரம் ரூபாயும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. குமாஸ்தாவின் கண்களில் மிளகாய்தூளை வீசி அவர்கள் கொள்ளையடித்தனராம். இது சம்பந்தமாக கேகாலை பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். இக்கொள்ளைக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் மோட்டார் கார் ஒன்றையும் பொலிசார் தேடுகின்றனர்.

---

### மகாராஷ்டிரத்தில் 16 மொழிகள்

பம்பாய், மே 13

லட்சத்திற்கு மேற்பட்டோர் பேசும் 16 மொழிகள் மகாராஷ்டிரத்தில் வழங்கிவருகின்றன. மகாராஷ்டிரத்தின் மொத்த ஜனத்தொகை 3 கோடியே 95 லட்சத்தில் மேற்கூறிய 16 மொழிகளையும் பேசுவோர் தொகை 98 சத விகிதமாகும்.

பிரதான மொழி மராத்தி. 320 லட்சம் பேர் மராத்தி பேசுகிறார்கள். 27 லட்சத்து 30 ஆயிரம் பேர் உருது பேசுகிறார்கள்.

எஞ்சியுள்ள 14 மொழிகளில் இந்தி, குஜராத்தி, கன்னடம், தெலுங்கு, சிந்தி, மாவாரி, தமிழ், டஞ்சாபி ஆகிய 8 மொழிகள் இதர ராஜ்யங்களிலிருந்து வந்தவை. பில்லி, கோண்டி, பஞ்சரி, லமனி—லம்பாடி ஆகிய மற்றும் 4 மொழிகள் ஆதிவாசிகள் பேசும் மொழிகள்.

# கேள்வி விளம்பரம்

## நயினாதீவு - புங்குடுதீவு ஆயச் சேவை

நயினாதீவு - புங்குடுதீவு ஆயச் சேவையின் தலைவர் அவர்களால் 1965-ம் ஆண்டு வைகாசி மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி வரை டிை சேவைக்கு "சீல்" வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரத்தின் பொருட்டு ரூபா 50-00 கட்டி 20-5-1965 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை புங்குடுதீவு கிராம சபை அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்கு கட்டிய பணத்தில் ரூபா 5-00 திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. விபரங்களை நயினாதீவு கிராமசபையிலும், புங்குடுதீவு கிராமசபையிலும் கரும நேரங்களில் அறிந்து கொள்ளலாம். கேள்விப்பத்திரம் நயினாதீவு கிராமசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் "சீல்" வைத்த கேள்விப் பெட்டிகளுள் போடப்பட வேண்டும். தவறின் பதிவுத் தபால் மூலம் தலைவர், நயினாதீவு - புங்குடுதீவு ஆயச் சேவை, நயினாதீவு. என்ற விலாசத்திற்கு குறித்த நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தின பிரதி ஒன்று அதே நேரத்தில் உள்ளூராட்சி உதவி அதிபர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்

கு. வி. தம்பித்துரை,
காரியதரிசி,
நயினாதீவு - புங்குடுதீவு ஆயச் சேவை.

10-5-1965 175

---

### யாழ். ரசிக சபா

டிை சபாவின் 1-வது நிகழ்ச்சியாக ஸ்ரீ A. G. ஐயாக்கண்ணு தேசிகர் அவர்களின் கச்சேரி யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் 15-5-65 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறும். இசைக்கலைஞர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

177 சபா அமைப்பாளர்கள்.

---

### தமிழர் ஏன் சிங்களவரில்லையா?

கொழும்பு, புதன்

"இந்த நாட்டில் தகுதி வாய்ந்த சிங்களவர் பலர் இருக்கையில் ஒரு தமிழரான திருச்செல்வத்தை எதற்காக ஸ்தலஸ்தாபன மந்திரியாக நியமிக்கவேண்டும்?" என்று தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகா பேராவலான என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார். "தமிழர்களுக்கு இந்த நாட்டைப் பகிர்ந்து கொடுப்பதற்கு இதுதான் முதல் படி" என்று கூறிய திரு. ஆர். ஜி. சேனநாயகா, தமிழர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போவதாக 'இலங்கைப் பட்டத்துடன்' கூச்சலிட்டுத் திரிந்த யு. என். பி யினர் இப்பொழுது தமிழர்களைத் தங்கள் தோள்களில் காவித் திரிகின்றனர்" என்று கூறினார்.

---

### சுழிபுரம்—மூளாய் பகுதிக்கு இரட்டைத்தட்டு பஸ்

சுழிபுரம், புதன்

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்ப்பாண மேற்கு டிப்போ பகுதியினரால் சுழிபுரம்—மூளாய் ஆகிய இடங்களுக்கு இரட்டைத்தட்டு பஸ் சேவைக்கு விடுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.


### வரி விளம்பரங்கள்

### விற்பனைக்கு

புதிய மொடல் "சிங்கர்" ரெயிலறிங் கால் மெஷின் விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. பொ. தம்பித்துரை, புற்பதி ரோட்; கொக்குவில் கிழக்கு. 252

"சிறந்த நிலைமையிலுள்ள A 50 E N ஒஸ்டின் கார் விற்பனைக்குண்டு. இந்துக்கல்லூரிக்கு அருகாமையிலுள்ள 17, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் பார்வையிடலாம்". 255

### தேவை

நன்றாக சமைக்கத் தெரிந்த சமையல்காரன் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். "இரத்தினகிரி", அராலி வடக்கு. 257

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் யாழ்ப்பாணநாதர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


### நன்றி அறிவித்தல்

நல்லூர் மூத்தவிநாயகர் கோவிலடி பிரபல வைத்தியர் செ. கந்தையா அவர்களின் மரணக்கிரியையின்போது எமது வாஞ்ஞை அறிவித்தலை ஏற்றுக்கொண்டு, நேரமாக சமுகமளித்தும், தந்தி மூலம் துக்கந்தெரிவித்தும் கௌரவித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்,

மனைவி: செல்லம்மா, பிள்ளைகள்: செல்லத்துரை, பத்மாவதி, குணரத்தினம், மருமகன்: நவரத்தினம், மைத்துனர்: அரியரத்தினம். 259


### WANTED

Wanted Lady Teacher to teach Pitman's Shorthand, Typewriting & Book-keeping in English Contact personally 9 a.m. on 15-5-65 (Saturday)

College of Commerce & Accountancy, (oposite Sita Soda Factory) 330, Kankesanthurai Road, Jaffna. 258


### 'பணிஸ் உண்டு பாலை அருந்துக'

காலி, புதன்

"பள்ளிமாணவர்கள் பணிஸ் பாணை உண்டு பாலைக் குடிக்க வேண்டும். இதனை ஊக்குவிப்பதற்காக மாதர் சங்கங்கள் இத்துறையில் கவனம்செலுத்த வேண்டும். இப்படிச்செய்தால் தான் மாணவர்கள் சுகமுள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் வருவார்கள். மாணவர்கள் சுகதேக முள்ளவர்களாக வளர்வதற்காகவே இத்திட்டத்தை அரசாங்கம் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்திருக்கிறது. ஆனால் தற்பொழுது நான்பார்த்த புள்ளி விபரங்களின்படி 25 வீத மாணவர்களே பணிஸ், பால் முதலியவற்றைச் சாப்பிட்டு வருகின்றார்கள், சீனி இல்லாது கொடுக்கும் பாலைக் குடிக்கமுடியாதென்று சிலர் குறைகூறுகின்றார்கள். அது தகுந்தகாரணமல்ல நாங்கள சீனி இல்லாது குடிக்கப் பழக வேண்டும்" என்று உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யு தஹநாயக்கா லங்கா மகில சமித்தி காலிக் கிளைக்கூட்டமொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க - இலங்கை தகராறு தீர்ந்தது

# 5 கோடியே 50 லட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்க முடிவு

## அமெரிக்க உதவி எந்தநேரத்திலும் கிடைக்கலாம்

கொழும்பு, செவ்வாய்

**அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக, இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே கடந்த சில காலமாகநிலவிவந்த தகராறு தீர்த்துவைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்ட ஈடாக ஐந்து கோடியே ஐம்பது லட்சம் ரூபா வழங்குவதென்று இலங்கை அரசாங்கம் இன்று முடிவு செய்தது.**

இதன் பலனாக நிறுத்தப்பட்ட அமெரிக்க உதவி மீண்டும் இலங்கைக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க உதவிகளை இலங்கை மீண்டும் பெறுவது குறித்து இரு அரசாங்கங்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுகள் வெற்றிகரமாக முடிவடைந்திருப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின் போது இலங்கைக்கான தனது உதவிகளை அமெரிக்கா நிறுத்தியது. இரு நாடுகளுக்குமிடையே நிலவிய தகராறுகள் தீர்க்கப்பட்டிருப்பதால் இலங்கைக்கான அமெரிக்க உதவி மீண்டும் எந்தநேரத்திலும் கிடைக்கலாமென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு 5 கோடியே 50 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையாக வழங்குவதென்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளபொழுதிலும் இந்தத் தொகை எவ்வளவு காலத்துக்குள் எப்பொழுது என்னமாதிரி வழங்கப்படுமென்பது குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை. இது குறித்து அரசாங்கம் ஆலோசனைசெய்துவருவதாக தெரியவருகிறது.

### ஸ்தானிகர் மகிழ்ச்சி

இதுகுறித்து இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் கருத்துத் தெரிவிக்கையில் நஷ்டஈட்டுத் தொகை பிரச்னை சுமுகமாக முடிந்ததையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் நிறுத்தப்பட்ட அமெரிக்க உதவிகளை இலங்கை மீண்டும் பெற்றுக்கொள்ள இந்த முடிவு சாத்தியமாக இருக்குமென்றும் தெரிவித்தார்.

# குடிதண்ணீர் விநியோகம் பற்றி யாழ். மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

"சிறுதுண்டு பைப்புகளை கொழும்புத்துறை வீதிக்கு போட்டால், குறுக்கு ரோட்டுகளுக்கு ஒருபொழுதும் தண்ணீர் கொடுக்க முடியாத நிலைமை வரும் என உணர்ந்து எனது அதிகாரத்தை உபயோகித்து முன்பு போட்டு மிஞ்சிய 4 அங்குல பைப்புகளை போடும்படி உத்தரவிட்டேன். என்னுடைய இச்செயல், ஒரு தனிநபரையோ, ஒரு பகுதியினரின் நன்மையைக் கருதியோ செய்யப்பட்டதல்ல. அந்த வட்டாரத்தின் பொது நன்மையை கருதியே செய்யப்பட்டது"

கொழும்புத்துறை வட்டாரத்தின் தண்ணீர் விநியோகம் பற்றி எழுந்துள்ள பிரச்னை சம்பந்தமாக யாழ்ப்பாணம் மேயர் திரு. எஸ். அ. மகாதேவா வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தண்ணீர் விநியோகத்தில் 1-ம் திட்டம் முடிந்ததும், அதற்குமுன் சில வட்டாரங்களுக்கு கொடுக்கப்பட்ட சிறு பைப்புகளை எடுக்கவேண்டியிருந்தது. 18,000 அடி நீள பைப்புகளை 12 வட்டாரங்களுக்கு பிரித்து கொடுக்க சபையில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 1-ம் வட்டாரத்திற்கு 1000 அடி பைப்கொடுக்க வேண்டியிருந்தது; 5-ம் வட்டாரமான கொழும்புத்துறைக்கான தண்ணீர் திட்டம் 1-ம் பகுதியல் சேராத போதிலும், அந்த வட்டாரத்திற்கும் கொடுக்க சபை தீர்மானித்தது. இதன்படி 5-ம் வட்டாரத்திற்கு 1000 அடி பைப் போடக்கூடியதாயிருந்தது. சாமியார் ரோட்டு சந்திவரை 1300 அடிக்குமேல் பைப் போடப்பட்டது. அப்படி செய்ததால் மற்ற வட்டாரங்களிலும் பார்க்க 5-ம் வட்டாரத்திற்கு சலுகை செய்ததென்றே சொல்லலாம். மேலும் அவ்வட்டாரத்திற்காக இரு அங்கத்தவர்கள் தங்கள் வட்டாரத்திற்கு கொடுத்த பைப்புகளிலிருந்து 800 அடி கொடுக்க சம்மதித்தபடியால், அதிலிருந்து தொடர்ந்து கொழும்புத்துறை ரோட்டுக்குப் போட உத்தேசித்துள்ளேன். சுவாமியார் ரோட்டில் இரு கரையிலும் 'ஸ்ராண்ட்' போடப்பட்டிருப்பதால், மத்தியிலும் ஒரு 'ஸ்ராண்ட்' போட்டால் அப்பகுதி முழுவதற்கும் தண்ணீர் விநியோகம் செய்ததாகக் கருதப்படும். அதன் நிமித்தம் சாமியார் ரோட்டுக்குப் போடக் கட்டளையிட்டேன்.

ஆனால் அவ்வட்டார அங்கத்தவர், சுவாமியார் ரோட்டில் பைப் போடக்கூடாதென்று வாதாடினர். இந்தப் பைப் அவருடைய வட்டாரத்துக்கு ஒதுக்கப்பட்டதல்லாதபடியாலும், இது வசிப்பாளருக்கு அவசிய தேவையானபடியாலும் இதைச் செய்யத் திட்டமிட்டுள்ளேன். இது முடிந்தவுடன் மிகுதிப் பைப்புகளைக் கொழும்புத்துறை வழியாக அது செல்லும்வரை போடுவேனென வாக்குறுதியளித்தும் அவ்வட்டார அங்கத்தவர் இதற்கும் சம்மதிக்கவில்லை. மேலும் இத்தருணத்தில் எந்தெந்த இடத்திற்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறதோ அந்தந்த இடத்திற்கு வரிப்பணத்தில் 2 வீதம் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக முதலில் ஒருபகுதியை முடித்தால் சுலபமாக இருப்பதோடு சபைக்கும் லாபமெனக் கருதியே இப்படிச் செய்யத் தீர்மானித்தேன்".

---

## காங்கிரஸ் மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நிர்வாக சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. காங்கிரஸின் 20-வது ஆண்டு மகாநாட்டை முன்னர் தீர்மானித்தபடி இம்மாதம் 14, 15, 16-ம் திகதிகளில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

---

## ஷேக் செய்தி

புதுடில்லி, மே, 11

ஷேக் அப்துல்லா கைதான செய்தியை இந்திய வானொலி அறிவிப்பதில் ஏற்பட்ட தாமதம் குறித்து இன்று நடைபெற்ற ராஜ்ய சபைக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதற்கு ஒலிபரப்பு மந்திரி திருமதி இந்திராகாந்தி பதிலளிக்கையில்; குறிப்பிட்ட செய்தியை தாமதமாக ஒலிபரப்பியதற்கு சில காரணங்கள் உண்டென்றும் இதற்காக மன்னிப்பைக் கேட்பதைத் தவிர வேறுவழியில்லை என்றும் கூறினர்.

---

## சர்வசமய ஐக்கிய இயக்கத்தை ஆசீர்வதிப்பர்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இமயமலை சுவாமிகள் அறுவரும் நாளை வியாழக் கிழமை மாலை 5-30 க்கு வெள்ளவத்தையிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்திற்கு விஜயம் செய்து சர்வசமய ஐக்கிய இயக்கத்தை ஆசீர்வதிப்பார்கள். இந்த இயக்கம் திரு. வி. எஸ். குணரத்தினம் அவர்களால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

---

### கூப்பன் புஸ்தகங்கள் காணவில்லை

நேற்று, பெரியகடை பஸ் ஸ்ராண்டில் கீழ்க்காணும் இலக்கங்களைக் கொண்ட நான்கு கூப்பன்கள் ஒரு ஆரஞ்சு நிறக் கடுதாசிப் பேக்கோடு காணாமல்போய்விட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 55/1, மவுண்ட் கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் சேர்ப்பிக்குமாறு தயவாகக் கேட்கிறோம். சன்மானம் வழங்கப்படும்.

இல: M 757428 இல: M 757429. இல: M 757430. இல: M 757431. 250

---

# "எனது வட்டாரத்துக்கு சலுகை காட்டப்படவில்லை"

## மேயர் அறிக்கைக்கு அங்கத்தவர் பதில்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புதுறை வட்டார குழாய்நீர் விநியோக வேலைத் திட்டம் சம்பந்தமாக மேயர் விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்குமுகமாக கொழும்புத்துறை வட்டார அங்கத்தவர் திரு. நம்பு கந்தையா நேற்று ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எனது வட்டாரம் தண்ணீர் திட்டத்தில் சேரவில்லை என்றும், எல்லா வட்டாரங்களுக்கும் 1000 அடி பைப்புகள் தான் கொடுத்ததென்றும் எனது வட்டாரத்துக்கு விசேட சலுகை காட்டப்பட்டதென்றும் மேயர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். ஆனால் சபை ஒவ்வொரு வட்டாரத்துக்கும் 1000 ரூபாயை 'பைப்' வேலைக்கு ஒதுக்கியதே ஒழிய 1000 அடி பைப்புத்தான் ஒவ்வொரு வட்டாரத்திற்கென்று எச்சந்தர்ப்பத்திலும் தீர்மானிக்கவில்லை. கீழ் வரும் வட்டாரங்களுக்கு முறையே 13-ம் வட்டாரத்திற்கு 250 அடி பைப்பும் 14-ம் வட்டாரத்திற்கு 1766 அடி பைப்பையும், 15-ம் வட்டாரத்திற்கு 1521 அடி பைப்பையும், 16-ம் வட்டாரத்திற்கு 1250 அடி பைப்பையும், 17-ம் வட்டாரத்திற்கு 1215 பைப்புகள் போடப்பட்டது என்பதையும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். நான் சுவாமியார்வீதிக்கு அறவே பைப் போடக்கூடாதென்று எச்சந்தப்பத்திலும் வாதாடவில்லை, சுவாமியார் வீதியில் தனி ஒருவருக்கு பைப் போடுவதை நான் எதிர்த்துள்ளேன். கொழும்புத்துறை ஆனந்தன் வடலிக்குட் வரை போட்ட பின் சுவாமியார் வீதிக்கு பைப் போடும்படி நான் ஸ்ரீராமநாதன் என்ஜினியருக்குக் கடிதம் மூலம் கடந்த மாதம் முற்பகுதியில் தெரிவித்தேன் சுவாமியார் வீதிக்கு முன்னுள்ள குறுக்கு வீதிகளான ஆசிரிவீதி, புங்கன்குளம் வீதி, சந்தானமாதா கோவில் வீதிமக்களுக்குத் தண்ணீர் பைப் போடாமல் பாரபட்சம் காட்டியதாக இருக்கும் என்றமுறையிலேயே நான் முதலில் எவருக்கும் பாரபட்சம் அற்ற முறையில் கொழும்புத்துறை பிரதான வீதிக்கு போடவேண்டுமென முடிவு செய்தேன். இருந்தும் கொழும்புத்துறை வீதி முழுப்பகுதிக்கும் போட பைப் காணாத பட்சத்தில் வேறு இரு அங்கத்தவர்கள் தங்கள் பைப்பிலிருந்து அரைவாசியைத் தந்து உதவினர்கள்.

---

## ஆனைப்பிறவில் எம்.பி.க்கு வரவேற்பு

சாவகச்சேரி, புதன்

"கிளிநொச்சித் தொகுதியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தொகுதியின் முன்னேற்றத்திற்குமான தகுந்த ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்வேன்" என்று கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆனையிறவு அரசாங்க உப்பள திறந்தவெளி அரங்கில் ஆனையிறவு தமிழரசு வாலிப முன்னணியினரின் ஆதரவில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

திரு க. சி. ஆறுமுகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். உப்பள வாயிலில் வந்திறங்கிய பண்டிதர் இரத்தினத்தை வடமாகாண உப்பள உதவிக்கமிஷனர் திரு ஈ. எம். ஏ. வீரசிங்கமும் ஆனையிறவு உப்பள அத்தியட்சகர் திரு. ஆர். ஆர். எஸ். நல்லையா பேசுகையில் ஆனையிறவு ஆஸ்பத்திரியை நல்லமுறையில் அபிவிருத்தி செய்தும், ஆனையிறவு உப்பள தொழிலாளர்கள் சௌகரியமாக வாழ்வதற்காக அவர்களுக்கு வீடமைப்பு வசதி செய்துகொடுக்கவும் ஏற்பாடு செய்தும் ஆனையிறவின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுமாறு பண்டிதர் இரத்தினத்தை கேட்டுக்கொண்டார்.

ஆனையிறவு உப்பள தொழிலாளர் சங்கத்தலைவர் திரு க. தில்லையம்பலம் பேசுகையில் உப்பள தொழிலாளர்களின் தேவைகளை எடுத்துக் கூறினர். வேறுபலரும் சொற்பொழிவாற்றினர். கூட்ட ஆரம்பத்தில் உமையாள்புரம் கண்ணகைஅம்பாள் கோவில் முன்றலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி கண்டி வீதி வழியாக கூட்ட அரங்கை வந்தடைந்து, கூட்டத்தில் ஆனையிறவு உமையாள்புரம் மக்கள் சார்பிலும் ஆனையிறவு தமிழரசு வாலிபமுன்னணி சார்பிலும் பண்டிதர் இரத்தினத்துக்கு ஒரு வாழ்த்துப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது.

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

பண்டாரவளைபகுதியைச்சேர்ந்த வியங்காவலைபாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. பொ. சிவகுரு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஹுணுகலை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## திருமலைக்கு புதிய திட்டம்

திருக்கோணமலை, புதன்

ஸ்தலஸ்தாபன அதிகாரிக்கு சமர்ப்பித்த அறிக்கையின் காரணமாக திருகோணமலை நகரசபைக்கு 9 அம்சத்திட்டமொன்றை ஸ்தலஸ்தாபன அதிகாரி தயாரித்துள்ளார், இவற்றுள் முஸ்லீம் வட்டாரம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துதலும் மறு வட்டாரங்களை புதிய முறையில் பிரிப்பதுபோன்ற விஷயங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

## சுபிமார்க்க கூட்டம்

பம்பலப்பிட்டி, புதன்

சேரன்திப் சுபி படிப்பகத்தின் ஆதரவில் அல்ஸ்ரான் பிளேஸில் கூட்டம் ஒன்று நடைபெறும் எனவும் இக்கூட்டத்தில் 'சுபி மார்க்கமும் அன்பும்' என்னும் பொருள் பற்றி அன்பர் பூபதிதாசர் சொற்பொழிவாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாரிஸ்டர் ஏ. எச். எம். இஸ்மயில் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

---

## பதவிஉயர்வுடன் இடமாற்றம்

உரும்பராய், புதன்

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் முப்பத்தி மூன்று வருடங்கள் ஆசிரியராகவும், சிரேஷ்ட உதவியாசிரியராகவும், பதில் தலைமையாசிரியராகவும் கடமையாற்றிய திரு க. சி. குருநேசன் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிப் பிரதம பகுதித்தலைமை ஆசிரியராக இம்மாதம் முதல் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் இதற்கு முன்னர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியராகவும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் நடைத்த புகுமுக வகுப்புப் போதனாசிரியராகவும் கடமையாற்றியிருக்கிறார்;

இலங்கைத்தீவை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 35-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org